**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 11.02.2026**
**OS. No. 278/2013**
**வழக்கு சாட்சி PW.3– ராமநாதன், த/பெ.வெங்கடாஜலம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் உறவினர் இல்லை என்றால் சரிதான், பக்கத்து நிலத்துக்காரர் ஆவேன். 1ம் பிரதிவாதி செல்லப்பனின் வீடு மற்றும் நிலம் ஆத்தூர் – சேலம் பைப்லைன் ரோட்டை ஒட்டி தென்புறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு ஒட்டி தென்புறம் தான் என்னுடைய வீடு மற்றும் நிலம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிலத்தின் ச.எண்.210/D ஆகும். அதில் சுமார் 2–3/4 ஏக்கர் நிலம் உள்ளது அதில் தான் நான் வீடு கட்டி குடியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிலத்திற்கு கிழபுறம் திருமூர்த்தி என்பவரின் நிலம் உள்ளது. அதற்கு ஆத்தூர் – சேலம் பைப்லைன் ரோட்டிற்கு மேற்குபுறம் 1ம் வாதியின் மகன் வீடு மற்றும் நிலம் உள்ளது. அதற்கு தெற்குபுறம் பழனிசாமியின் நிலம் உள்ளது.

2) பழனிசாமியின் நிலத்திற்கு தெற்குபுறம் சென்னியப்பனின் நிலம் உள்ளது. சென்னியப்பனின் நிலத்திற்கு தெற்குபுறம் தான் 1ம் வாதி சின்னதம்பியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்தின் ச.எண்.209/4 என்றால் சரிதான். ஆத்தூர் – சேலம் பைப்லைன் ரோட்டிற்கு ஒட்டி அமைந்துள்ள வாதிகளின் வீட்டிலிருந்து தெற்குபுறமாக மேற்கண்ட நிலங்களின் வழியாகத்தான் வாதி தங்களின் ச.எண்.209/4 நிலத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. ச.எண்.209/3 ன் வழியாகத்தான் வாதிகள் சென்று வருவதாக என் நிரூபண வாக்குமூலத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு எந்த வண்டிப்பாதையும் இல்லை என்றால் சரியல்ல. ச.எண்.209/4 நிலத்திற்கு ச.எண்.209/3 ல் வண்டிப்பாதை உள்ளதாக என் நிரூபண

வாக்குமூலத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றும், அந்த ச.எண்.209/3 மொத்தமாகவே விவசாய நிலம் என்றால் சரியல்ல. ச.எண்.209/4 ல் வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும் வீடு எதுவும் இல்லை என்று தான் சொல்லியுள்ளார் என்றும், நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) வண்டிப்பாதையின் அளவு 12 X 142 மீட்டர் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அளந்ததன் அடிப்படையில் சொல்லியுள்ளேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளக்கவில்லை என்றும், பார்வையிட்டு மட்டும் தான் சென்றார் என்றும், அந்த சமயத்திலும் நான் அங்கு இல்லை என்றும், வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ச.எண்.209/3 ல் வண்டிபாதை உள்ளது என்று காட்டக்கூடிய வருவாய் ஆவணங்கள் அல்லது அது சம்மந்தமான வேறு ஏதேனும் ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வாதிகள் பிரதிவாதிகள் வாய்மொழியாக பிரித்துகொண்ட சமயத்தில் நான் உடன் இருந்தேன். பாகபிரிவினையில் யார் யாருக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் வாதிகளின் தாத்தா சேமலைகவுண்டருக்கு 6 ஏக்கர் நிலம் பிரித்து தந்ததை ஆவணத்தில் பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் ச.எண்.209/3 ல் தடவழி உள்ளதாக ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) மேற்கண்ட வண்டிப்பாதையின் நீளம், அகலம், அதன் திசை குறித்தும் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதா என்றால் 142 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளது. அந்த பத்திரம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 1958 ல் ஏற்படுத்தப்பட்டதாகும். அதில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த சமயத்தில் நான் பிறக்கவே இல்லை. பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அதில் எந்த வண்டிப்பாதையும் குறிப்பிடவில்லை என்றும், நான் வாதிகளுக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1958ம் வருட பத்திரத்திற்கு பிறகு வேறு ஏதேனும் பத்திரம் வாதிகள் பிரதிவாதிகளுக்கு இடையே தடம் குறித்து ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5) வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு தடவழியாக வாதிகள் சென்று வருவதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மாடு எங்கள் நிலத்தில் வந்து மேய்ந்து கொண்டிருந்தது சம்மந்தமாக எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றும், அதை மனதில் வைத்துக்கொண்டு தற்போது வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் நிலத்திற்கு பக்கத்தில் ஆணைகவுண்டர் நிலம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு ஏற்பு ரசீது 44/2022ல் குறிப்பிட்டுள்ள ராமநாதன் என்பவர் நான் தான் என்றால் சரிதான். அதில் மகேஸ்வரி என்று குறிப்பிட்டுள்ளது என் மனைவி என்றால் சரிதான். 12.03.2022ல் பிரதிவாதிகள் எங்கள் நிலத்தில் அமைந்துள்ள தடத்தின் வழியாக சென்ற போது நாங்கள் அவர்களை தடுத்து தகாத வார்த்தையால் திட்டி, அடிக்க வந்தது தொடர்பாக பிரதிவாதிகள் நங்கவள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதற்கு காவல் நிலையத்தில்ரசீதும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதிகளுக்கும், வேறு ஒருவருக்கும சண்டை ஏறப்ட்டது நாங்கள் விலக்கி விடதான் சென்றோம். அதனால் எங்கள் மீதும், புாகார் கொடுத்துவிட்டார்கள்.

6) பிரதிவாதிகள் கொடுத்த 12.03.2022ம் தேதிய புகார் மற்றும் புகார் ஏற்பு சான்று பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சொல்வது தவறு என்றும், நாங்கள் தான் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் சுமார் 10 வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல, நாங்கள்

பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். மேற்கண்ட பிரச்சனையினால் தான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.